உங்கள் அபிமான தினதமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 13.07.2026 • மலர் 04 • இதழ்: 194 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 13.07.2026 • Vol : 04 • Issue : 194 • Page : 4 • Rs. 5/-

### இந்தியா - நியூசிலாந்து

# உறவின் தூணாக இந்திய வம்சாவளியினர்

## பிரதமர் மோடி புகழாரம்

ஆக்லாந்து, ஜூலை 13

இந்தியா நியூசிலாந்து உறவின் தூணாக இந்திய வம்சாவளியினர் உள்ளதாக 'கியா ஓரா மோடி' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று நியூசிலாந்து சென்ற பிரதமர் நரேந்திர மோடி, இன்று அந்நாட்டில் உள்ள இந்தியர்களை சந்திக்கும் 'கியா ஓரா மோடி' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார். இதில், நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனும் பங்கேற்றார்.

மிகுந்த உற்சாகத்துடன் ஆரவாரம் செய்த 10,000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "நியூசிலாந்தில் உள்ள இந்திய சமூகம் எனக்கு அளித்த சிறப்பு வரவேற்புக்கு நன்றி. உறுதி, கடின உழைப்பு, விடாமுயற்சியின்மூலம் இந்திய சமூகம் நியூசிலாந்தின் ஒவ்வொரு துறையிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்து, ஒரு ஆற்றல்மிக்க சக்தியாக உருவெடுத்துள்ளது.

இந்திய சமூகத்தினர் தங்கள் கலாச்சாரம், விழாக்கள், மரபுகளைப் பாதுகாத்து, நியூசிலாந்தின் பன்முக கலாச்சாரக் கட்டமைப்பை வளப்படுத்தி வருகின்றனர். அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். குறிப்பாக, தன்னார்வத் தொண்டு, சமூக நலன் ஆகியவற்றில் இந்தியச் சமூகம் அளித்து வரும் பங்களிப்புகள் மகத்தானவை.

இந்தக் கூட்டம் இந்திய வம்சாவளியினருக்கானதாக இருந்தாலும், இது உண்மையில் இந்தியா நியூசிலாந்து நட்புறவு, விளையாட்டுத் தொடர்புகள், பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றின் கொண்டாட்டமாகும்.

2026ம் ஆண்டு, இரு நாடுகளின்விளையாட்டு ஒத்துழைப்பில் 100வது ஆண்டு. இரு நாடுகளும் தங்களது விளையாட்டுத் தொடர்புகளை மேலும் ஆழப்படுத்த ஆர்வமாக உள்ளன. உள்ளூர் மாவோரி கலாச்சாரத்தின் அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான அணுகுமுறை பாராட்டுக்குரியது. இந்தியாவும் பாரம்பரியத்தை வளர்ச்சியுடன் இணைக்கும் ஒரு வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றி வருகிறது.

இந்தியா நியூசிலாந்து உறவின் தூணாக இந்திய வம்சாவளியினர் உள்ளனர். இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையே நட்பு, நம்பிக்கை, ஒத்துழைப்பு ஆகியவற்றின் பாலமாகத் தொடர்ந்து பணியாற்றி, இரு நாடுகளின் நலனுக்காக இந்த உத்திசார் ஒத்துழைப்பின் முழு ஆற்றலையும் வெளிக்கொண்டுவர இந்திய சமூகத்தினர் உதவ வேண்டும்" என்று பேசினார்.



## சவால்களை எதிர்கொள்ள இயற்கை விவசாயத்துக்கு நாம் மாற வேண்டும்: ஆளுநர் அர்லேகர் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 13

சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்காவில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர், நிகழ்ச்சியின் கையேட்டை வெளியிட்டார். உடன் சென்னை ஐஐடி இயக்குநர் வீ.காமகோடி உள்ளிட்டோர்.

'தற்போதைய காலச்சூழலில் பருவநிலை மாற்றம், தண்ணீர் பற்றாக்குறை உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ள இயற்கை விவசாயத்துக்கு நாம் மாற வேண்டும்' என ஆளுநர் அர்லேகர் தெரிவித்தார்.

சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்காவில் 'கூட்டு மற்றும் நிலையான முன்னெடுப்புகள் மூலம் பாரதத்தின் மறுமலர்ச்சி' என்ற தலைப்பிலான சிறப்பு கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் பேசியதாவது: தற்போதைய சூழலில் மண்வளச் சீரழிவு, தண்ணீர் பற்றாக்குறை மற்றும் பருவநிலை மாற்றம் ஆகியவை நமக்கு முன்னால் உள்ள பெரும் சவால்களாக உருவெடுத்துள்ளன. இவற்றை எதிர்கொள்ள இயற்கை விவசாயம், ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளை நோக்கி நாம் உடனே மாற வேண்டியது அவசியமாகும்.

மண்வளம் மீட்டெடுப்பு: விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பொதுமக்களின் சுகாதாரத்தை உறுதி செய்யவும், நீண்டகால அடிப்படையில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் ரசாயனமற்ற விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும். மேலும், அழிந்துவரும் மண் வளத்தை மீட்டெடுப்பதும் மிகவும் முக்கியமாகும்.


அதேபோல், தற்சார்புடைய மற்றும் எத்தகைய சவால்களையும் தாங்கிக் கொள்ளக்கூடிய ஒரு வலுவான விவசாயக் கட்டமைப்பை உருவாக்க அரசு இயந்திரம், நிறுவனங்கள் மற்றும் சமூகம் என அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். வளமான மண்ணே ஆரோக்கியமான குடிமக்களையும், ஒரு வலிமையான தேசத்தையும் உருவாக் கும். இவ்வாறு அவர் பேசினார்.



சென்னை, போரூர் ஆற்காடு சாலையில் அமைந்து, அருள்பாலித்து வரும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக, அப்பகுதியில் வேண்டுகோளுக்கு வேண்டும் வரம் தரும் அம்மனாக , அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரி அம்மனுக்கு, நூதன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. இக்கோயில் சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிக்காக இடமாற்றம் செய்து ஆஞ்சநேயர் கோவில் அருகில் புதிய ஆலயம் கட்டப்பட்டு, அப்பகுதி மக்கள் அனைவரது ஏற்பாட்டாலும் இப்பணி நிறைவுற்று, பராபவ வருடம் ஆனி மாதம் 28ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 12.07.2026, திரியோதசி திதியில் மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில், கன்னியா லக்னத்தில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். ஆலய தலைவர் மகேந்திரன்,சங்கர், துணைத் தலைவர் செல்வம், செயலாளர் ராஜி, பொருளாளர் மனோகரன் மற்றும் விழா குழுவினர் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.

## தமிழக முதல்வர் வந்து பெங்களூரு குடிநீர் பிரச்சினையை பார்வையிடலாம்

### தேவகவுடா கருத்து



காரைக்கால், ஜூலை 13

தமிழக முதல்வர், திமுக, அதிமுக தலைவர்கள் என அனைவரும் வந்து பெங்களூருவில் நிலவும் குடிநீர் பிரச்சினையை நேரில் பார்த்து தெரிந்து கொள்ளலாம் என முன்னாள் பிரதமர் எச்.டி.தேவகவுடா தெரிவித்துள்ளார்.

காரைக்கால் மாவட்டம் திருநள்ளாறு தர்பாரண்யேஸ்வரர் கோயிலில் நேற்று தரிசனம் செய்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழகத்தில் திமுகவும், அதிமுகவும் அரசியல் ரீதியாக எதிரெதிராக இருந்தாலும், காவிரிநீர் பிரச்சினை எழும்போதெல்லாம், இந்த விவகாரத்தில் ஒன்றுபட்டு உறுதியான நிலைப்பாட்டை எடுக்கின்றன. நாங்கள் எங்களது மாநிலத்தில் பாசனத்துக்காக தண்ணீர் கேட்கவில்லை. குடிநீருக்காகத்தான் கேட்கிறோம்.

எனவே, தமிழக முதல்வர் விஜய், திமுக, அதிமுக தலைவர்கள்என அனைவரும் பெங்களூரு, சிக்மகளூர், கோலார் பகுதிகளுக்கு வந்து அங்கு நிலவும் குடிநீர் பிரச்சினையை நேரில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## கர்நாடக அரசு மரியாதையுடன் பாடகி எஸ். ஜானகி உடல் தகனம்

மைசூறு, ஜூலை 13

இந்தியசினிமாவில்பழம்பெரும்பாடகியாகதிகழ்ந்தவர் எஸ் . ஜானகி. ஜானகியம்மா, கான கோகிலா, தென்னிந்தியாவின் நைட்டிங்கேல், இசை அரசி என்று பல்வேறு பட்டங்களில் புகழப்படும் எஸ்.ஜானகி, இந்திய சினிமா முழுமைக்கும் அறியப்பட்ட பாடகி ஆவார். சுமார் 48 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார். 2016ம் ஆண்டுக்கு பிறகு சினிமாவில் இருந்து விலகிய எஸ்.ஜானகி மைசூருவில் தனது மகன் குடும்பத்தினருடன் வசித்து வந்தார். இவரது ஒரே மகன் முரளிகிருஷ்ணாகடந்தஜனவரி மாதம் உடல்நலக்குறைவு காரணமாக மரணம் அடைந்தார். மருமகள் உமா மற்றும் பேரப்பிள்ளைகளுடன் மைசூருவிலேயே ஜானகி வசித்து வந்தார்.

தனது ஒரே மகன் இறந்த துயரத்தில் இருந்த ஜானகியை உடல் நலக்கு றைவும் பற்றிக்கொண்டது. கடந்த சில மாதங்களாகவேஅவர்உடல்நலக்குறைவால்அவதிப்பட்டு வந்தார். நேற்று அவரது உடல்நிலை மோசம் அடையவே உடனடியாக மைசூருவில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஜானகிக்கு சிகிச்சையின் போது மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்தது. அவருக்கு வயது 88.

மைசூருவில் உள்ள மகாராஜா கல்லூரி மைதானத்தில் ஜானகியின் உடல் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பொதுமக்கள், ரசிகர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்தது.

மைசூருவில்பாடகிஎஸ்.ஜானகிநினைவாகநினைவகம் அமைக்க வேண்டுமென இசையமைப்பாளர் ஹம்சலேகா வேண்டுகோள் வைத்துள்ளார்.

பாடகி எஸ். ஜானகி உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று கர்நாடக முதல்மந்திரி அறிவித்திருந்தார். அதன்படி கர்நாடக அரசு சார்பில் அமைச்சர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். அதைத்தொடர்ந்து 30 குண்டுகள் முழங்க இறுதிஅஞ்சலிசெலுத்தப்பட்டது.கம்பீரமாகஅணிவகுத்து நின்ற போலீசார் தலா 3 முறை வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதி சடங்கு மைசூரு நகரை அடுத்துள்ள கனியனஹுண்டி கிராமத்தில் அமைந்துள்ள தோட்டத்தில் நடைபெற்றது. அவரது உறவினர்கள் இறுதிச்சடங்கு செய்தனர். அதன்பிறகு அவருடைய உடல் தகனம் செய்யப்பட்டது.

### கன்னியாகுமரியில்

## வார விடுமுறையை ஒட்டி திரண்ட சுற்றுலாப் பயணிகள்: சூரிய உதயத்தை கண்டு களித்தனர்



கன்னியாகுமரி, ஜூலை. 13

சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினந்தோறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் என ஆயிரக்கணக்கான வந்து செல்வது வழக்கம். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் திரிவேணி சங்கமத்தில் சூரிய உதயத்தை பார்த்துவிட்டு கடலில் புனித நீராடி வருகின்றனர். இந்த நிலையில் நேற்று வார விடுமுறை நாளை முன்னிட்டு காலை முதலே கணிசமான அளவில் சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வர தொடங்கினர். இதை அடுத்து திரிவேணி சங்கமத்தில் நின்றவாறு கடலில் இருந்து உதித்து வந்த சூரியனை கண்டு மகிழ்ச்சியடைந்தனர். பெரும்பாலானோர் தங்களது செல்போனில் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டனர். இதனைதொடர்ந்து காந்தி, காமராஜர் மண்டபங்கள், காட்சி கோபுரம் உள்ளிட்ட இடங்களிலும் அதிகமாக சுற்றுலா சென்று சுற்றி பார்த்தனர். பின்னர் காலை 8 மணி முதல் பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தில் படகு சேவை தொடங்கியது. இதை ஒட்டி பயணிகள் அங்கு நீண்ட வரிசையில் காத்திருந்து டிக்கெட் எடுத்து, கடலில் படகில் சென்று கடல்நடுவில்அமைந்துள்ளதிருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் மண்டபம், கண்ணாடி பாலம் உள்ளிட்ட இடங்களை சென்று சுற்றி பார்த்து மகிழ்ச்சி அடைந்தனர். கன்னியாகுமரியில் நேற்று காலை முதலே வெயில் அதிக அளவில் இருந்தது. கன்னியாகுமரி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

### சென்னை, சூலை அங்காளம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள

## ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் திருக்கோயில் ஆலய புணராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா



சென்னை, ஜூலை 13

சென்னை, சூலை அங்காளம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் திருக்கோயில் ஆலய புணராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இக்கோயில் நிகழும் ஆனி மாதம் 26 ஆம் நாள் முதல் 28 ஆம் நாள்வரை வெள்ளிக்கிழமை தொடர்ந்து இரண்டு நாட்களாக யாக பூஜைகளும் மேலும் ஞாயிற்றுக்கிழமை 12.07.2026, திரியோதசிதிதி மிருகசீரிஷம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் காலை 9 மணிக்கு மேல் பத்தரை மணிக்குள்ளாக சிம்ம லக்கனத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஏராளமான பக்த கோடிகள் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற்று சென்றனர். ஆலய தலைவர் ரவி, மற்றும் பெருமாள், மகேஷ், பார்த்தசாரதி, ரகு, பாபு, பாலா, உதயகுமார், ராஜேஷ், ரமேஷ் , மதன், சுரேஷ், தண்டபாணி, கிருஷ்ணா, முகன், லோகு, செந்தில், சுப்பிரமணி, முருகன், தினேஷ், கணேஷ், கார்த்திக் கிருஷ்ணா, விஷால், அசோக், ஏமல் ஆகியோர் கும்பாபிஷேகத்தைசிறப்பாகநடத்தினர்.

### கோவை ஈஷா ஆதியோகி சிலை முன்பு

# சமுதாய மேம்பாட்டுக்கான ஒரு மருத்துவ விழிப்புணர்வு



கோவை ஜூலை:13

மார்பகப் புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக,40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு கோவை கங்கா மருத்துவமனை மேற்கொண்டு வரும் 'ப்ராஜெக்ட் சக்தி' என்னும் மருத்துவ பரிசோதனை திட்டத்தின் 150வது இலவச மார்பகப் புற்றுநோய் பரிசோதனை முகாம் ஈஷா யோகா மையத்தின் ஆதியோகி வளாகத்தில் நடைபெற்றது.

முகாமில் 100 கும் மேற்பட்ட பெண்களுக்குப் பரிசோதனை செய்யப்பட்டது. மேலும் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிதல்,மார்பக சுயபரிசோதனை செய்து கொள்ளுதல் மற்றும் சிறந்த ஆரோக்கியத்திற்கு உரிய நேரத்தில் மருத்துவ உதவி பெறுவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

நவீன வசதிகளுடன் நடமாடும் மருத்துவமனை

இந்தச் சிறப்பு முகாம்,கங்கா மருத்துவமனையின் நவீன மேமோகிராபி வசதிகள் கொண்ட நடமாடும் மார்பகப் புற்றுநோய் பரிசோதனை வாகனம் மூலம் நடத்தப்பட்டது. ஈஷா யோகா மையத்தைச் சேர்ந்த மா சந்திர ஹாசா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு இந்த முகாமைத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய கங்கா மருத்துவமனையின் மார்பகப் புற்றுநோய் அறுவை சிகிச்சை மற்றும் பிளாஸ்டிக் சர்ஜரி நிபுணர் டாக்டர்.ராஜா சண்முக கிருஷ்ணன்,உயிர்களைக் காப்பாற்றுவதில் நோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

மேலும் அவர் கூறுகையில், "பெண்களைப் பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோய் மிகவும் பொதுவானது. பெண்களைத் தாக்கும் அனைத்துப் புற்றுநோய்களிலும் இது சுமார் நான்கில் ஒரு பங்காக உள்ளது.இதை எப்போதும் தடுத்துவிட முடியாது என்றாலும்,ஆரம்பத்திலேயே கண்டறிந்து சரியான சிகிச்சை அளிப்பதன் மூலம் சிறந்த பலன்களைப் பெறலாம். ஆரம்பக் கட்டத்திலேயே மார்பகப் புற்றுநோயைக் கண்டறிந்தால்,அவர்கள் 5 ஆண்டுகள் உயிர்வாழ்வதற்கான வாய்ப்பு 99 சதவீதமாக உள்ளது.எனவே வழக்கமான பரிசோதனைகள் மற்றும் உரிய நேரத்தில் சிகிச்சை பெறுவது மிகவும் அவசியமாகும்.

"அதிக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்நவீன பரிசோதனை வசதிகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் மற்றும் பெண்களுக்கு உரிய நேரத்தில் நோய் கண்டறிதல், இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம், நோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நேரத்தில் மருத்துவ வழிகாட்டுதல், சரியான சிகிச்சை மற்றும் நோயறிதலுக்குப் பிறகான தொடர்ச்சியான ஆதரவு கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது"என்றும் கூறினார்.

இதுவரை 10,122 பெண்களுக்கு மார்பகப் பரிசோதனை செய்யப்பட்டதில் புற்றுநோய் கண்டறியப்பட்ட 81 பெண்களுக்கு கங்கா மருத்துவமனை மூலம் முற்றிலும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.ப்ராஜெக்ட் சக்தி பற்றி

கடந்த 2022ல் தொடங்கப்பட்ட இத்திட்டம், பெண்களுக்கான மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, உரிய நேரத்தில் சிகிச்சை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மருத்துவமனைக்கு வரத் தயங்கும் பெண்களுக்காக,'நடமாடும் மேமோகிராபி வாகனம்' மூலம் அவர்கள் வசிப்பிடங்களுக்கே சென்று சிறப்புப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் (NGOs) இணைந்து சேலம்,திருவண்ணாமலை உள்ளிட்ட பல மாவட்டங்களில் மார்பக சுயபரிசோதனை மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன.பரிசோதனையில் புற்றுநோய் இருப்பது உறுதி செய்யப்படும் ஏழைப் பெண்களுக்கு,கங்கா மருத்துவமனையில் அறுவை சிகிச்சை, கீமோதெரபி உள்ளிட்ட அனைத்து சிகிச்சைகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

# ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கு பணபலன்களை உடனே வழங்கவேண்டும் அரசுக்கு கோரிக்கை



தென்தாமரைகுளம், ஜூலை.13

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஓய்வு பெற்ற பணியாளர்கள் கூட்டமைப்பின் நாகர்கோவில் மண்டலம் ஆலோசனை கூட்டம் நாகர்கோவில் பிஷப் ஹவுஸ் கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது .இந்த கூட்டத்திற்கு கூட்டமைப்பின் தலைவர் ஆதித்தன் தலைமை வகித்தார். செயலாளர் ஹென்றிறி, பொருளாளர் மரியதாசன், கௌரவத்தலைவர் சைமன்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டத்தில் ஓய்வு பெற்ற அரசு போக்குவரத்து கழகதொழிலாளர்களுக்கு 10வருடமாக டி. ஏ. அரியர் மற்றும் 2013, 2016 2019, 2023 செட்டில்மெண்ட் மற்றும் இதர பணபலங்களையும் உடனே வழங்கவும் தமிழக அரசை வலியுறுத்தி இந்த கூட்டத்தின் வாயிலாக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது . இந்தகூட்டத்தில் 350க்கும் மேற்பட்ட சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# த.வெ.க.,வில் மாற்றுக் கட்சியினர் இணைப்பு விழா



திருப்பூர், ஜூலை13

தமிழக வெற்றி கழகம் சார்பில் திருப்பூர் மாவட்டம் ராயபுரம் பகுதி 29 வது வட்டக் கழகத்தில் மாற்றுக் கட்சியினர் 200க்கும் மேற்பட்டோர் பகுதி செயலாளர் விஜயகுமார், ரஞ்சித் ஏற்பாட்டில் மாநகர் மாவட்ட செயலாளர் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பாலமுருகன் முன்னிலையில் மாற்றுக் கட்சியில் இருந்து தமிழக வெற்றி கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

மேலும் சட்டமன்ற உறுப்பினருக்கு ஹிட்லர் வாழ்க்கை வரலாற்று புத்தகத்தை வழங்கினார். இந்த நிகழ்வில்29வது வட்டக் கழக செயலாளர் ரஞ்சித், வருகை தந்த கழக நிர்வாகிகளுக்கு புதிதாக பொறுப்பு ஏற்றுக் கொண்ட உறுப்பினர்களுக்கு அனைவருக்கும் மதிய அறுசுவை விருந்து காலேஜ் ரோடு மட்டன் கடைஅப்பாஸ், வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# கஞ்சா மற்றும் ஆயுதங்களுடன் சுற்றித்திரிந்த நபர் கைது

### கஞ்சா, கத்திகள் மற்றும் இருசக்கர வாகனம் பறிமுதல்





மதுரை, ஜூலை 12

மதுரை மாவட்டம், மேலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட குமார் நகர் பகுதியில், சிலர் கஞ்சா பொட்டலங்கள் மற்றும் ஆயுதங்களுடன் இருப்பதாக மதுரை மாவட்ட காவல்துறையின் சிறப்பு குழுவினருக்கு (Special Team) ரகசிய தகவல் கிடைத்தது. அதன்பேரில், இன்று (12.07.2026) காலை, சிறப்பு குழுவினர்சம்பவ இடத்திற்குச்சென்றுகண்காணிப்பு மற்றும் சோதனை மேற்கொண்டனர். காவல்துறையினரைக் கண்டதும் அங்கிருந்த நபர்கள் தப்பியோட முயன்ற நிலையில், அபினேஷ் (வயது 22), த/பெ. கணேசன், சொக்கம்பட்டி, மேலூர் என்பவரை போலீசார் மடக்கிப் பிடித்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து, 5.5 கிலோ கஞ்சா, 1 மின்னணு எடை இயந்திரம் (Electronic Weighing Machine), 2 கத்திகள், மற்றும் ஒரு இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக மேலூர் காவல் நிலையத்தில் போதைப் பொருள் தடுப்புச் சட்டம் (NDPS Act) மற்றும் ஆயுதச் சட்டம் (Arms Act) ஆகியவற்றின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, கைது செய்யப்பட்ட நபரிடம் தீவிர விசாரணைமேற்கொள்ளப்பட்டுவருகிறது.மேலும், தப்பியோடிய மற்ற குற்றவாளிகளை கைது செய்ய தனிப்படை அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதுரை மாவட்ட காவல்துறை, போதைப்பொருள் விற்பனை, கடத்தல் மற்றும் ஆயுதங்களுடன் சட்டவிரோதமாக செயல்படுவோர் மீது தொடர்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்என்றும், இதுபோன்ற குற்றச்செயல்கள் குறித்து தகவல் தெரிந்தால் உடனடியாக காவல்துறைக்கு தெரிவித்துபொதுமக்கள்ஒத்துழைப்புவழங்குமாறும் கேட்டுக்கொள்கிறது

# பெரும்பாலையில் உணவு பாதுகாப்புத் துறை மற்றும் காவல்துறை இணைந்து புகையிலை விற்பனை செய்த கடைக்கு 25 ஆயிரம் அபராதம் மற்றும் கடை இயக்கதடை



தருமபுரி ஜூலை 13

தருமபுரி மாவட்ட ஆட்சியர் சரவணன் ஆலோசனைப்படி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அருண் கபிலன் மற்றும் உணவு பாதுகாப்புத் துறை மாவட்ட அலுவலர் மருத்துவர் கைலாஷ் குமார் ஆகியோர் மாவட்டம் முழுவதும் காவல்துறை மற்றும் உணவு பாதுகாப்பு துறையினர் தீவிரமாக ஆய்வு செய்து தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை மற்றும் நடமாட்டம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவு பிறப்பித்தனர்.

அதன் ஒரு பகுதியாக பெரும்பாலை காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள், சிறப்பு நிலை காவலர்கள் பெரும்பாலை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் ஆய்வில் பெரும்பாலை அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் ஒரு போட்டி கடையில் இருந்த தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதித்து மேல் நடவடிக்கையாக பெரும்பாலை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் சின்ன மாதன் மாவட்ட உணவு பாதுகாப்பு துறைக்கு பரிந்துரை அடிப்படையில் உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நீதிமன்ற அலுவலர் மருத்துவர் கைலாஷ் குமார் ஆகியோர் அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள பெட்டிக்கடை 14 நாட்களுக்கு இயக்கத் தலைவிதித்ததுடன், உடனடி அபராதம் ரூ. 25,000 விதித்து உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து பென்னாகரம் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் மற்றும் காவல் நிலைய சிறப்புநிலைஉதவிஆய்வாளர்பூங்காவனம் இணைந்து மேற்படி கடையை அடைத்து கடை உரிமையாளர்களுக்கு உடனடி அபராத ரூ. 25,000 விதித்த சலான் வழங்கி மேற்கொண்டு 14 நாட்கள் கடை இயக்க தடை விதித்த நியமன அலுவலர் உத்தரவு நோட்டீஸ்வழங்கினர்.இதனைதொடர்ந்து பெரும்பாலை பேருந்து நிலையம் அருகில் உள்ள மளிகை, குளிர்பானங்கள், பெட்டி பீடா கடைகள் மற்றும் தேநீர், பலகார கடைகளில் ஆய்வு செய்த போது ஒரு மளிகைகடையில்காலாவதியானஉணவுப் பொருட்கள் அதன் அருகே மற்றொரு கடையில் உரிய விவரங்கள் இல்லாத தின்பண்டங்கள்,

அச்சிடப்பட்ட செய்தித்தாள்களில் பலகாரங்கள் வினியோகம் பறிமுதல் செய்யப்பட்டு உடனடி அபராதம் இரு கடை விற்பனையாளர் களுக்கும் தல ரூ. 1,000 விதம் ரூ. 2,000 விதிக்கப்பட்டது. மேலும்ரோடுஓரதேநீர்பலகாரகடைகளில் திறந்த நிலையில் வைத்திருந்த பலகாரங்களைஉரிய முறையில்கண்ணாடி அல்லது கவர் தடுப்பு செய்து மண் ,தூசு, அயல் பொருட்கள் விழாமல் தடுத்து விற்பனை செய்யவும்,

பலகாரங்கள் செய்யும் சமையல் எண்ணெயும் ஒரு முறைக்கு மேல் பயன்படுத்தாமலும் அதே அச்சிடப்பட்ட செய்தித்தாள்கல் உணவுப் பொருட்கள் வினியோகம் பொட்டலமிடுதல் தவிர்க்க விழிப்புணர்வு செய்யப்பட்டது. விதிமுறைகள் மீறி தொடரும் பட்சத்தில் பறிமுதல் மற்றும் அபராத விதிக்கப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்டது. தொடர்ச்சியாக சின்னம்பள்ளி பகுதியில் ஆய்வில் ஒரு பேக்கரியில் தேயிலை தரம் ஆய்வில் கலப்படத் தேயிலை உபயோகம் கண்டறிந்து பறிமுதல் செய்யப்பட்டு அளிக்கப்பட்டது.கடைஉரிமையாளருக்கு உடனடிஅபராதம்ரூ.1,000விதிக்கப்பட்டு எச்சரிக்கையுடன் மேற்படி தேயிலை சப்ளை செய்தவர் விவரம் சேகரித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உணவு சார்ந்த வணிகர்கள் அனைவரும் உணவு பாதுகாப்பு உரிமை பெற்று வணிகம் செய்திட வேண்டும்.

அவ்வாறு உணவு பாதுகாப்பு உரிமம் சான்றிதழ் இன்றி இனி வணிகம் செய்தால் ரூ.5,000உடனடிஅபராதம்விதிக்கப்படும் எனவும் முறையாக புதுப்பித்து இருந்தல் வேண்டும் என்று உணவு பாதுகாப்புத்துறையினர் எச்சரித்தனர். தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள்விற்பனை,பதுக்குதல்மற்றும் உணவு சார்ந்த புகார்களுக்கு உணவு பாதுகாப்புதுறை புகார் எண்: 9444642322 whatsapp அல்லது எஸ் எம் எஸ் மூலம் பொதுமக்கள் தகவல் அளிக்கலாம் என உணவுபாதுகாப்புத்துறையினர்தெரிவித்தனர்.

### மதுரை மாவட்டத்தில்

# மும்மொழிக் கொள்கையை நான் ஏற்க மாட்டேன்: பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா பேச்சு



மதுரை, ஜூலை 13

மதுரை தனக்கன்குளம் பகுதியில் நகைச்சுவை நடிகர் மதுரை முத்து அவரது இடத்தில் அமைக்கப்பட்ட நூலகம் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா, நூலகத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏழை மற்றும் எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு புத்தகங்கள், புத்தாடைகள், மரக்கன்றுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய பட்டிமன்ற நடுவர் சாலமன் பாப்பையா,

வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில்நூலகங்கள்மற்றும்புத்தகங்கள் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு முக்கிய பங்காற்றுகின்றன என்றார். தங்களுக்கு விருப்பமான துறையில் மாணவர்கள் புத்தகங்களைப் படித்து முன்னேறுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இன்றைய இளைஞர்களுக்கு அறிவுத்திறன் அதிகரித்துள்ளதாக கூறிய அவர், படைப்பாற்றல் சிறப்பாக இருப்பதாக பாராட்டினார். ஆனால், சமூகப் பொறுப்புணர்வு மற்றும் சமூக இயக்கங்களில் அவர்கள் சரியாக இருக்கிறார்களா என்ன தெரியவில்லை.

தேசிய கல்விக் கொள்கையில் இடம் பெற்றுள்ள மும்மொழிக் கொள்கையை நான் ஏற்க்கமாட்டேன், இரண்டு மொழிகள் போதுமானவை என்றும், தேவையான நேரத்தில் மற்றொரு மொழியை கற்றுக்கொள்ளலாம் மும்மொழி தேவையில்லை என்றும் கூறினார்.

மேலும், மும்மொழிக் கொள்கை எதிர்காலத்தில் வேறு ஒரு மொழியை திணிப்பதற்கான வழியாக அமையக்கூடும் என்றார்

தற்போதைய முதலமைச்சர் செயல்பாடு எப்படி உள்ளது? காலம் போகட்டும் பார்ப்போம் இதுவரை நல்லா இல்லை இதற்குப் பின்பு நல்லா இருக்கலாம்.

குடும்பங்களில் பணத்தை அதிகம் முக்கியத்துவம் கொடுக்கும் நிலை உருவாகி, பாசமும் உறவுகளும் குறைந்து வருவதாகவும் அவர் கவலை தெரிவித்தார். நாட்டுப்பற்று வளர வேண்டும் என்றும்,

எந்தக் கட்சியில் இருந்தாலும் நாட்டின் முன்னேற்றத்திற்காக செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், சமுதாயத்தில் பணத்தின் ஆதிக்கமும், அனைத்து நிலைகளிலும் லஞ்சம் அதிகரித்திருப்பதும் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டு மதிப்புகள் குறைவதற்கு காரணமாக இருப்பதாக சாலமன் பாப்பையா தெரிவித்தார்.

# தமிழகத்தில் 9 மாவட்டங்களில் இரவு 10 மணி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜூலை 12

தெற்கு குஜராத்தில் இருந்து மத்திய கேரளா வரை ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன்காரணமாக தமிழகத்தில் இன்று முதல் 13ம் தேதிவரைமேற்குதொடர்ச்சிமலைமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், தமிழகத்தில் 9 மாவட்டங்களில் இரவு 10 மணி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கடலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மயிலாடுதுறை, விழுப்புரம், சென்னை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



சென்னை,கிண்டி புனித தோமையார்மலை,கண்டுமாநகரில்அமைந்துள்ள,அருள்மிகு ஸ்ரீ ஓம் சக்தி நாகாத்தம்மன் ஆலய புணராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழும் மங்களகரமான ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 28 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 12.07.2026, திரியோதசி திதி மிருகசீரிஷம் நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில், கன்னியா லக்னத்தில் ஸ்ரீ நாகாத்தம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து சுவாமி அலங்காரம் தீபாராதனை நடைபெற்ற பின்பு வருகை தந்த அனைவருக்கும் ஆலயம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. ஆலய தலைவர் கார்த்தி, செயலாளர் பிரகாஷ், பொருளாளர் தமிழ்ச்செல்வன் மற்றும் விழா குழுவினர் ஆகியோர் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.

# கோவில்பட்டியில் சகாராவை தாண்டாத ஒட்டகம் பயிற்சி மையம் சார்பில் புத்தகத் திறனாய்வு கூட்டம்



கோவில்பட்டியில் சகாராவை தாண்டாத ஒட்டகம் பயிற்சி மையம் சார்பில் இலக்கியச் சாரல் பன்னிரெண்டாவது நிகழ்வாக சாந்தி வனத்து வேர்கள் புத்தகத் திறனாய்வு கூட்டம் கி.ரா.நினைவரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நல்லாசிரியர் ஜான் கணேஷ் தலைமை தாங்கினார். ஆசிரியை இராதா அனைவரையும் வரவேற்றார். உரத்த சிந்தனைத் தலைவர் சிவானந்தம், மற்றும் கவிஞர் போத்திராஜ் முன்னிலை வகித்தார். முத்தமிழ்ச் செல்வி முருக சரஸ்வதி வரவேற்புரை வழங்கினார். வானொலிப் புகழ் கிருஷ்ணன் வாழ்த்துப்பாடல் பாட, முனைவர் கி.பிரபு, எழுத்தாளர் பொன்னுராஜ் வாழ்த்துரை ழங்கினார்கள். "சாந்தி வனத்து வேர்கள்" என்ற புத்தகத்தை ஆசிரியர் இராஜேஷ் சங்கரப் பிள்ளை, முனைவர் செல்வம், முனைவர் பவானி, சிவசங்கரி ஆகியோர் திறனாய்வு செய்தனர். கூட்டத்தில் பணி ஓய்வு பெற்ற வங்கி மேலாளர் சங்கர், கோபாலகிருஷ்ணன், புத்தக ஆசிரியர் பொன்னுராஜ் கலந்து கருத்துரை வழங்கினர். புத்தக ஆசிரியர் திருநாவுக்கரசன்ஏற்புரைவழங்கினார்.இலக்கியச்சாரல் நிறுவனர்தினகரன்அடுத்ததிறனாய்வுக்கானபுத்தகத்தை வழங்கினார்.

இறுதியாக தமிழா தமிழா ராஜலட்சுமி நன்றி கூறி நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

# தென்தாமரைகுளம், சீதப்பால் பகுதிகளில் மது விற்ற 2 பேர் கைது

தென்தாமரைகுளம், ஜூலை. 13


தென்தாமரைகுளம் அருகே உள்ள அண்டிவிளை சந்திப்பில் தென் தாமரைகுளம் சப்இன்ஸ்பெக்டர் பிரைட் பிளசிங்தலைமையிலான போலீசார்ரோந்து பணியில் ஈடு பட்டிருந்தனர். அப்போது அங்கு சாக் குபையில் மறைத்து வைத்து பொதுமக்களுக்கு ஒருவர் மதுபாட்டில் விற்பனை செய்து கொண்டிருந்தார். உடனே அவரை பிடித்து விசாரித்த போது தெங்கம்புதூர் பகுதியை சேர்ந்த பெயின்டரான கண்ணன் (45) என்பது தெரிந்தது. மேலும் அவர் கையில் இருந்த சாக்குப் பையை சோதனை செய்த போது அதில் 26 மது பாட் டில்களை விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்ததும் தெரிந்தது. உடனேஅவற்றை பறிமுதல் செய்த னர்.மேலும் அவரை கைது செய்து காவல் நிலையம். அழைத்து சென்று விசாரித்த போது அவர் மீது நாகர்கோவில், சுசீந்திரம், கோட்டார் ஆகிய காவல்நிலையங்களில் வழக்குகள் நிலுவையில் இருந்தது கண்டறியப்பட்டது.இதையடுத்து அவரைரை போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சீதப்பால் அருகே தாழக்குடி அனந்தபத்மநாபபுரம், யாதவர் நடுத்தெரு பகுதியை சார்ந்த ஔவையார் என்பவர் மகன் பாடலிங்கம் என்ற துரை (50). இவர் அரசு அனுமதியின்றி மதுபாட்டிலை பதுக்கி வைத்துக் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது.

தகவலின் அடிப்படையில் ஆரல்வாய்மொழி உதவி ஆய்வாளர் அனுஜன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அதிக விலைக்கு மதுபாட்டிலை விற்பனை செய்து கொண்டிருந்த பாடலிங்கம் என்ற துரையை கைது செய்து அவரிடமிருந்து 26 மது பாட்டில்கள் பறிமுதல் செய்தனர்.

# குலசேகரம் அருகே பள்ளி ஊழியர் தற்கொலை

## காரணமான தொழிலாளிக்கு போலீஸ் வலை



மார்த்தாண்டம், ஜூலை. 13

மார்த்தாண்டதை அடுத்த குலசேகரம் திருவந்திக்கரை பகுதியை சேர்ந்தவர் மகேஷ். இவர் துபாயில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி அனுஷா (33) இவர்களுக்கு 6 வயதில் ஒரு மகள் உள்ளார். பட்டதாரியான அனுஷா ஒரு தனியார் பள்ளியில் ஊழியராக பணியாற்றி வந்தார்.

இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த மரம் வெட்டும் தொழிலாளியான சங்கர் (38) என்பவருடன் நட்பு ஏற்பட்டுள்ளது. சமீப காலமாக அந்த நட்பை அனுஷா துண்டித்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் தன்னுடன் நட்பை தொடருமாறு சங்கர், அனுஷாவை மிரட்டி உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அனுஷா வீட்டில் வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்த நிலையில் காணப்பட்டார். அதற்கு முன்னதாக அவர் துபாயில் உள்ள தனது கணவருக்கு செல்போன்மூலம் ஒரு குறுந்தகவல் அனுப்பி உள்ளார். இனி நான் வாழ விரும்பவில்லை. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். மகளை பார்த்துக் கொள்ளுங்கள் என குறிப்பிட்டு இருந்தார்.

இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த மகேஷ் மனைவியை செல்போனில் தொடர்பு கொண்டும், தொடர்பு கிடைக்காததால் உடனடியாக உறவினர்களுக்கு தெரிவித்துள்ளார். அங்கு உறவினர்கள் வீட்டில் சென்று பார்த்தபோது அனிஷா தூக்கு போட்டு தற்கொலை செய்திருப்பது தெரிய வந்தது. இது தொடர்பாக குலசேகரம் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் வழக்கு பதிவு செய்து, தலைமுறைவாக உள்ள தொழிலாளி சங்கரை தேடி வருகின்றனர்.

வியட்நாமில் சுற்றுலா கனவு சோகமாக முடிந்தது – படகு விபத்தில்

# தருமபுரி தொழிலதிபர் உட்பட 15 இந்தியர்கள் பலி



தருமபுரி ஜூலை 13

வியட்நாமின் பிரபல சுற்றுலாத் தீவான பூ குவோக் (Phu Quoc) அருகே ஏற்பட்ட அதிவேகப் படகு விபத்து இந்தியாவையே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற அதிவேகப் படகில் 32 இந்திய சுற்றுலாப் பயணிகள் மற்றும் 4 ஊழியர்கள் என மொத்தம் 36 பேர் பயணம் செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது. கடலில் திடீரென ஏற்பட்ட மோசமான வானிலை மற்றும் கடல் சீற்றம் காரணமாக படகு கவிழ்ந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த கோர விபத்தில் 13 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் என மொத்தம் 15 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 10 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் கிடைத்ததும் உள்ளூர் மீட்புக் குழுவினர் மற்றும் கடலோரக் காவல் படையினர் விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு, 21 பேரை உயிருடன் பத்திரமாக மீட்டுள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

உயிரிழந்தவர்களில், தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட கடத்தூர் பகுதியைச் சேர்ந்த தொழிலதிபர் ஜெ. செந்தில்குமார் உயிரிழந்தது மாவட்ட மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயிரிழந்த செந்தில்குமாருக்கு பூவிழி (வயது 40) என்ற மனைவியும், 9 வயதில் ஒரு பெண் குழந்தையும் உள்ளது. சுற்றுலா பயணமாக வெளிநாடு சென்ற நிலையில் ஏற்பட்ட இந்த துயரச் சம்பவம், செந்தில்குமாரின் குடும்பத்தின ரையும், உறவினர்களையும், நண்பர்களையும் மட்டுமின்றி, கடத்தூர் பகுதி மக்களையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

பொள்ளாச்சியில் நடந்த

# அண்ணாமலை மாநாட்டில் ஈரோட்டை சேர்ந்தவர்கள் பங்கேற்பு



ஈரோடு ஜூலை 13

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக அண்ணாமலை இருந்து வந்தார். இந்த நிலையில் அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இதை தொடர்ந்து அவருக்கு தேசிய அளவில் பொறுப்பு நியமிக்கப்படலாம் எதிர் பார்க்கப்பட்டது ஆனால் அந்த பதவியும் அவருக்கு வழங்கப்படவில்லை. இதனால் சிறிது காலம் அண்ணா மலை அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தார். இந்த நிலையில் அவர் வீ தி லீடர்ஸ் என்று அமைப்பை தொடங்கினார். இந்த இயக்கத்தில் ஏராளமானவர்கள் உறுப்பினர்களாக சேர்ந்து வருகிறார்கள். இந்த இயக்கத்தை அரசியல் இயக்கமாக மாற்ற அண்ணாமாலை முடிவு செய்துள்ளார். இதனால் முதல் மாநாடு கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் நடந்தது.

இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போதையில்லா இயக்கம் என்ற பெயரில் இந்த மாநாடு நடக்கிறது. இந்த மாநாட்டில் தமிழ் நாடு முழுவதும் ஏராளமான பேர் கலந்து கொண்டனர். ஈரோட்டில் இருந்தும் வீ தி லீடர்ஸ் அமைப்பை சேர்ந்தவர்கள் அக்னி ராஜேஷ் தலைமையில் ரவிச்சந்திரன் மற்றும் ஏராளமான பேர் வாகனங்களில் பொள்ளாச்சிக்கு சென்று இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நாகர்கோவிலில்

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு: வாகன முகப்பு விளக்குகளில் கருப்பு ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்வு



நாகர்கோவில், ஜூலை.13

கன்னியாகுமரி மாவட்டத்தில் விபத்துகளைகுறைக்கும்வகையில்மாவட்ட போலீஸ் எஸ் பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் காவல்துறையினர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். போக்குவரத்து விதிமுறை மீறுபவர்களுக்கு அபராதம் மதிப்பு, வழக்குப்பதிவு என ஒருபுறம் இருந்தாலும் மறுபுறம் காவல்துறை சார்பில் பள்ளி கல்லூரிகளில்சாலைபாதுகாப்பு குழுக்கள், நோ ஹெல்மெட் நோ என்ட்ரி, விபத்தில்லா குமரி என்ற தலைப்புகளில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடுத்த கட்டமாக வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள எல்இடி விளக்குகள் பறிமுதல் செய்யப்படுவதுடன், ஒளிரும் தன்மையை கட்டுப்படுத்த வாகன முகப்பு விளக்குகளில் கருப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு வருகின்றனர். நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள சாலையில், நாகர்கோவில் போக்குவரத்து காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

நாகர்கோவில் போக்குவரத்து காவல் ஆய்வாளர் அருண் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், எதிரே வரும் வாகன ஓட்டிகளின் பார்வை பாதிக்கப்படாமல் விபத்துகளைத் தவிர்க்கும் நோக்கில் வாகனங்களின் முகப்பு விளக்குகளில் கருப்பு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. மேலும், போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர் அசோக், காவலர் ஐயப்பன் உடன் தன்னார்வலர்களான ராமசாமி பிள்ளை, ஜே.கே. ராஜேஷ் மற்றும் லட்சுமி ஆகியோருடன் இணைந்து சாலையில் சென்ற வாகனங்களை நிறுத்தி, முகப்பு விளக்குகளில் கருப்பு ஸ்டிக்கர்களை ஒட்டி, இரவு நேரங்களில் அதிக வெளிச்சம் ஏற்படுத்தும் ஆபத்துகள் குறித்து வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வின் போது, வாகன ஓட்டிகள் போக்குவரத்து விதிகளை முறையாகக் கடைப்பிடிக்கவும், பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ளவும் காவல்துறையினர் அறிவுறுத்தினர்.

விளாத்திகுளம் தனியார் திருமண மண்டபத்தில்

# விடுதலை சிறுத்தை கட்சியின் மாவட்ட செயலாளர் கூட்டம்



விளாத்திகுளம் ஜூலை 13.

வருகின்ற ஆகஸ்ட் 17ம் தேதி உளுந்தூர்பேட்டையில் நடைபெற உள்ள எழுச்சித்தமிழர் பிறந்தநாள், தமிழ் தேசியஎழுச்சிமாநாடுகூட்டத்திற்கான, மாவட்ட செயற்குழு கூட்டம் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வேம்பார் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ஆ. சடையாண்டி தலைமையில் , சிறப்பு அழைப்பாளராக மண்டல செயலாளர் ராஜகுமார் நடைபெற உள்ள தமிழ் தேசிய இன எழுச்சி மாநாட்டிற்கான முன்னேற்பாடுகள் குறித்து கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனைகளை வழங்கினார்

இந்நிகழ்வில் விடுதலை சிறுத்தை கட்சி மாவட்டச்துணைசெயலாளர். சண்முகராஜ், சுந்தர். கோட்டைச் செல்வி.முகாம்பியா.குழந்தை எசு. தினேஷ்வளவன்.அசோகன்.மேட்சம். விஜயன்.கதிரேசன்.இளையாரஜா. முருகச்செல்வம்.தினேஷ்.ராஜவேல். சந்தரசேகர்.ஆனந்த்.ராஜ்சேகர்.மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



பாலக்கோடு பேரூராட்சியில்

# குவிந்துள்ள குப்பைகளால் சுகாதார சீர்கேடு

தருமபுரி ஜூலை 13

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ள நிலையில் சுமார் 20,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் தினசரி ஒவ்வொரு தெருவிலும் வீடுகளுக்கே சென்று தூய்மை பணியாளர்கள் குப்பைகளை பெற்று திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை இரண்டு பகுதிகளாக மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என பிரிக்கவேண்டும்.

ஆனால் பாலக்கோடு பேரூராட்சி 6வது வார்டுக்கு உட்பட்ட பைபாஸ் ரோடு அருகே பேரூராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகள் மற்றும் கடைகளில் சேகரிக்கப்படும் கோழி கழிவுகள் அனைத்தும் சாலை ஓரத்திலேயே கொட்டப்படுவதால் குப்பைகள் சாலைகளில் பறந்து வாகன ஓட்டிகளுக்கு மிகவும் இடையூறை ஏற்படுத்துகிறது.

மேலும் கோழி கழிவுகளால் ஏற்படும் துர்நாற்றத்தால் அவ்வழியே செல்லும் பொதுமக்கள் மிகுந்த அவதிக்கு உள்ளாகின்றனர்.

அதிகாரிகளின் அலட்சியத்தால் சாலையோரம் கொட்டப்படும் குப்பைகள் மழை போல் தேங்கியுள்ளதாகவும் இதுகுறித்து பலமுறை பேரூராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும் அதிகாரிகள் மெத்தனப் போக்காக செயல்படுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

விளாத்திகுளம் அருகே

# மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் சீறிப்பாய்ந்த 38 ஜோடி மாடுகள்



விளாத்திகுளம் ஜூலை 13.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள சூரங்குடி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பெத்தநாச்சி அம்மன்,ஸ்ரீ முனியசாமி திருக்கோவில் ஆனி மாத கொடை விழாவை முன்னிட்டு, சூரங்குடி தேவேந்திர குல வேளாளர் சமுதாயம் சார்பில் மாபெரும் மாட்டு வண்டிகள் பந்தயம் நடைபெற்றது. சின்னமாடு,பூஞ்சிட்டு என இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் ராமநாதபுரம்,விருதுநகர்,சிவகங்கை,திருநெல்வேலி,தூத்துக்குடி உள்ளிட்ட தமிழகத்தின்பல்வேறுபகுதிகளில்இருந்து 38 ஜோடி மாடுகள் போட்டியில் கலந்து கொண்டு சீறிப்பாய்ந்தன, போட்டியானது சூரங்குடி முதல் விளாத்திகுளம் சாலையில் நடைபெற்றது, போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் மற்றும் ஓட்டி வந்தசாரதிகளுக்குவிழாகமிட்டியின் சார்பாக பரிசுத்தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது.நடைபெற்ற இந்த மாபெரும் மாட்டுவண்டி எல்கை பந்தயத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேன், விளாத்திகுளம் முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் ராமச்சந்திரன், விளாத்திகுளம் திமுக தெற்குஒன்றியசெயலாளர்இம்மானுவேல் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்வில் மாவட்ட பிரதிநிதி செந்தூர்பாண்டி ஒன்றிய துணைச் செயலாளர் சுப்பிரமணியன் கிளை செயலாளர்கள் சந்திரசேகர், சடையாண்டி,சுந்தர், சரவணன் ஒன்றிய தகவல்தொழில்நுட்பஅணிஅமைப்பாளர் பாரதிதாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## மேல் மிடாலம் கடற்கரையில்

# கடல் அலையில் சிக்கிய சொகுசு கார் மீட்பு

கருங்கல், ஜூலை. 13

புதுக்கடை அருகே உள்ள அனந்தமங்கலம் சேரும் பகுதியை சேர்ந்தவர் சதீஷ் (33). இவர் தனது சொகுசு காரில் நண்பர்களுடன் மேல்மிடாலம் கடற்கரைக்கு சென்றார். அப்போது சமூக வலைத்தளங்களில் ரீல்ஸ் பதிவிடுவதற்காக கடற்கரை மணலில் காரை அதிவேகமாக ஓட்டி சாகசம் செய்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக காரின் சக்கரம் கடல் ஈர மணலில் ஆழமாக புதைந்தது. இதையடுத்துஇளைஞர்கள்எவ்வளவோ முயன்றும் காரை வெளியே எடுக்க முடியவில்லை.

இளைஞர்களின் ஆபத்தான சாகசத்தை கண்டு அதிருப்தி அடைந்த அப்பகுதி மக்கள் கார் மணலில் சிக்கியதை பார்த்தும் அவர்களுக்கு உதவ முன் வராமல் சென்றனர். இதற்கு இடையே கடல் அலையின் வேகம் அதிகரித்ததால் பெரிய கயிறு கொண்டு கரை கரையில் தூண் போன்ற பகுதியில் கட்டினர்.

பின்னர் பொதுமக்கள் யாரும் உதவாத காரணத்தால் இளைஞர்கள் ஜேசிபி வாகனத்தை கொண்டு வந்து கடல் மணலை அப்புறப்படுத்தி புதைந்திருந்த சக்கரத்தை வெளியில் எடுத்து காரை மீட்டனர். இந்த சம்பவம் குறித்து குளச்சல் கடலோர பாதுகாப்பு மற்றும் கருங்கல் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இ.என்.டி.டாக்டர் சிவக்குமார் கிளினிக்கில்

# தலைசுற்றல், மயக்கத்திற்கு நவீன சிகிச்சை மையம் யாகரிஷி வராஹ குருஜி திறந்து வைத்தார்




வேலூர், ஜூலை.13

வேலூர் ஆபீஸ் லைன், கிருஷ்ணா நகரில் (ஐ சி ஐ சி ஐ வங்கி பக்கத்தில்) இ.என்.டி கிளினிக் நடத்தி வருபவர் டாக்டர். எ.சிவகுமார். காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிபுணரான இவர், 40 ஆண்டுகளுக்கும் மேலாக மருத்துவத் துறையில் அனுபவம் பெற்றவர். வேலூர், சென்னை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சை பிரிவு தலைவராகவும், மருத்துவ கண்காணிப்பாளராகவும், மருத்துவக் கல்லூரி முதல்வராகவும் பொறுப்பு வகித்துள்ளார். இது தவிர சர்வதேச அறுவை சிகிச்சை நிபுணர்கள் கல்லூரியில் ஃபெலோஷிப்பாக உள்ளார். காது, மூக்கு, தொண்டை மருத்துவ சிகிச்சையில் நிபுனத்துவம் பெற்ற டாக்டர் சிவக்குமார், தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு உலக தரத்தில் சிகிச்சை அளிக்கும் வகையில், நவீன உபகரணங்களுடன் தனது கிளினிக்கை விரிவுபடுத்தி உள்ளார். இதன் துவக்க விழா நேற்று காலை 9 மணி முதல் 11 மணி வரை நடந்தது.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக பள்ளிகொண்டா அருகே உள்ள ஸ்ரிஸ்தலம் ஸ்ரீ வாராஹி ஷேத்திரத்தை சிருஷ்டித்த யாக ரிஷி ஸ்ரீ வராஹ குருஜி கலந்து கொண்டு சிறப்பு யாகம் செய்து நவீன சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார். திறப்பு விழாவுக்கு வந்தவர்களை டாக்டர்கள் சிவகுமார், நிவேதிதா சிவகுமார், விஷ்ணு, கிருத்திகா விஷ்ணு ஆகியோர் வரவேற்றனர். இதுகுறித்து டாக்டர் எ.சிவகுமார் கூறுகையில், காது, மூக்கு, தொண்டை மற்றும் தலைச்சுற்றல், மயக்கம், தள்ளாடுதல் போன்ற பாதிப்பு உள்ளவர்களுக்கு வேலூர் மாவட்டத்திலேயே முதன் முறையாக உலக தரத்தில் நவீன கருவிகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதற்காக நவீன ரக கருவிகள் கிளினிக்கில் பொருத்தப்பட்டுள்ளது. எங்களை நாடிவரும் நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்து அவர்களை முழுமையாக குணப்படுத்தி அனுப்புவது எங்களது நோக்கம். இந்த மையத்தின் மூலம் வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சித்தூர் மாவட்ட மக்கள் குறைந்த செலவில் நிறைவான சிகிச்சை பெற முடியும். எங்களது சிகிச்சை மையம் தினமும் பிற்பகல் இயங்குகிறது. இனிவரும் காலங்களில் வெளியூரில் இருந்து வரும் நோயாளிகளுக்காக தினமும் காலையும், மாலையும் சிகிச்சை மையம் இயங்கும். இவ்வாறு டாக்டர் சிவகுமார் கூறினார். நிகழ்ச்சியில் டாக்டர்கள் அருணன், பரணி, டி.நந்தகுமார், ராமரத்தினம், அருளாளன், செந்தாமரை கண்ணன், குமரேசன், காளிதாஸ், சுபபிரியா, த.வெ.க., வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் வேல்முருகன், முன்னாள் எம்.எல்.ஏ., நீலகண்டன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று தூத்துக்குடி மாவட்ட நிர்வாகச் சங்க இணையதளம் சேவையினை தொடங்கி வைக்கும் நிகழ்வில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன்ராஜா , மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ.ஸ்ரீநாத் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன், NDSO நிறுவனம், APRIL நிறுவனம் NLCTamilNaduPowerLtd நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் நிர்வாகிகளுடன் புரிந்துணர்வு பரிமாற்றம் செய்யப்பட்டது.



தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா இன்று சிப்காட் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கே.டி.சி நகர் பகுதியில் காவல்துறையினருடன் நடை ரோந்து (Foot Patrol) மேற்கொண்டு அப்பகுதி பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்தும், சட்டவிரோத செயல்களில் யாரேனும் ஈடுபட்டால் காவல்துறையினருக்கு தயங்காமல் தகவல் தெரிவிக்கலாம் என்றும், சிசிடிவி கேமராக்கள் பொருத்துவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தும், மேலும் காவல்துறையினரின் பாதுகாப்பு பணிகள் குறித்தும் பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

## ஈத்தாமொழி அருகே

# காதல் திருமணம் செய்த இளம் பெண் தற்கொலை: போலீஸ் விசாரணை

நாகர்கோவில், ஜூலை. 13

ஈத்தாமொழி அருகே உள்ள காற்றாடித்தோட்டம் பகுதியை சேர்ந்தவர் சுதன் மனைவி மாலினி (24). இவர்கள் தற்போது நங்கூரன் பிலாவிளை பகுதியில் வசித்து வருகின்றனர். காதலித்து திருமணம் செய்து கொண்ட இவர்களுக்கு 6 வயதில் ஒரு மகளும், 2 வயதில் மகனும் உள்ளனர்.

இந்த நிலையில் கணவன் மனைவிக்கு இடையே குடும்ப பிரச்சினை காரணமாக அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இது குறித்து மாலினி தன தாய் ராஜத்திடம் இடம் கூறி வந்துள்ளார். அவரும் தனது மகளை சமாதானம் செய்து வந்துள்ளார். இந்தநிலையில் நேற்று முன்தினம் கணவன் மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மாலினி தனது தாயை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவழைத்துள்ளார். மகள் வீட்டுக்கு வந்த ராஜம் இருவரையும் சமாதானம் செய்து பேசிக்கொண்டிருந்தார். அப்போது திடீரென படுக்கை அறைக்கு சென்ற மாலினி கதவை உட்பக்கமாக பூட்டி கொண்டார். சுதன் மனைவியை பலமுறை அழைத்தும் கதவை திறக்கவில்லை. பின்னர் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, மாலினி மின்விசிறியில் தூக்கிட்டு தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

அவரை மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகொண்டுசென்றனர். அங்குபரிசோதித்த டாக்டர்கள் மாலினி ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து ராஜம் ஈத்தாமொழி போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



## புதுக்கடை அருகே

# பைக்கில் வந்து பள்ளி மாணவி செயின் பறிக்க முயற்சி: வாலிபர் கைது

புதுக்கடை, ஜூலை. 13

புதுக்கடை அருகே உள்ள செந்தறை பருத்திவிளை பகுதியை சேர்ந்தவர் வின்சென்ட் மகள் வினிஷா (16). இவர் அந்த பகுதியில் உள்ள கீழ்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வருகிறார். இந்த நிலையில் சம்பவ தினம் மாலையில் பள்ளி முடிந்து வனிஷா வீட்டிற்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது கீழ்குளம் கிராம நிர்வாக அலுவலகம் பகுதியில் சாலையில் மாணவி நடந்து செல்லும் போது, இருசக்கர வாகனம் ஒன்றில் ஹெல்மெட் அணிந்து வேகமாக வந்த நபர் ஒருவர் திடீரென மாணவியின் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை பறிக்க முயன்றார். உடனடியாக மாணவி சத்தம் போட்டார். வினிஷாவின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வரவே, இருசக்கர வாகனத்தில் வந்தவர் அங்கிருந்து தப்பித்து ஓடி சென்று விட்டார்.

இதை அடுத்து மாணவியின் தந்தை வின்சென்ட் இது குறித்து புதுக்கடை போலீசில் புகார் செய்தார். புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வந்தனர். இதற்கு இடையில் இந்த சம்பவம் தொடர்பாக கீழ்குளத்தை அடுத்த பரக்கன் விளை என்ற இடத்தை சேர்ந்த பென்டவின் என்பவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் மீது திருட்டு உட்பட 14 வழக்குகள் போலீஸ் நிலையத்தில் பதிவாகியுள்ளதாக தெரிய வருகிறது. போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## கன்னியாகுமரியில்

# நடுக்கடலில் படகு கவிழ்ந்து தத்தளித்த 4 மீனவர்கள் மீட்பு

கன்னியாகுமரி,ஜூலை.13

கன்னியாகுமரியை அடுத்த கோவளம் பகுதியை சேர்ந்தவர் சதீஷ் (29). இவர் தனக்கு சொந்தமான நாட்டுப் படகில் அதே பகுதியைச் சேர்ந்த புஷ்பராஜ் ( 65), சுரேஷ் (59), மதின் (29) ஆகியோருடன் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்கு கடலுக்கு மீன் பிடிக்க சென்றார். இவர்கள் நடுக்கடலில் மீன் பிடித்து விட்டு காலை 8 மணிக்கு கரை திரும்பினர். அப்போது அலையில் சிக்கி இவர்களது படகு கவிழ்ந்தது. இதனால் 4 மீனவர்களும் கடலில் விழுந்து தத்தளித்தனர். இதை கரையிலிருந்து பார்த்த மீனவர்கள் கடலில் குதித்து அவர்களை பத்திரமாக மீட்டு கரைக்கு வந்தனர். கவிழ்ந்த படகையும் மீட்டு கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். இருப்பினும் படகில் இருந்த என்ஜின், வலைகள் மற்றும் மீன்கள் கடலில் மூழ்கி சேதமடைந்தன.

இது பற்றிய தகவல் அறிந்ததும் கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு குழும போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினார்கள்.




## மாத்தூர் மத வழிபாடு கூடம் பிரச்சனை:

# திருவட்டாறில் இந்து முன்னணி கண்டன ஆர்ப்பாட்டம்

மார்த்தாண்டம், ஜூலை.13

மாத்தூர் தொட்டி பாலம் அருகே அலுவலகம் என்று துவங்கப்பட்டு அனுமதி இன்றி நீதிமன்ற உத்தரவை மீறி செயல்பட்டு வரும் கிறிஸ்தவ வழிபாடு கூடத்தை சீல் செய்து மூட வலியுறுத்தி இந்து முன்னணி சார்பில் பல கட்ட போராட்டங்கள் நடத்தியும் நடவடிக்கை எடுக்காத தமிழக அரசு மற்றும் அதிகாரிகளை கண்டித்து நேற்று இந்து முன்னணி மாவட்ட தலைவர் ஆறுமுகம் தலைமையில் திருவட்டாறு,

காங்கரை சந்திப்பு பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வர சி சுப்ரமணியம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்து முன்னணி பாஜக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவட்டாறு ஒன்றிய தலைவர் ஐயப்பன், பாஜக மேற்கு மாவட்ட தலைவர் ஆர் டி சுரேஷ், கிழக்கு மாவட்ட தலைவர் கோபகுமார் உட்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். போராட்டத்தை தொடர்ந்து மாத்தூர் செல்லும் சாலை தடுப்பு வேலிகள் அமைத்து போலீசார் கண்காணித்தனர். இந்த போராட்டத்தை தொடர்ந்து இரண்டு டிஎஸ்பி ஒரு ஏடி எஸ்பி தலைமையில் 500 மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். போராட்டம் காரணமாக குலசேகரம் மார்த்தாண்டம் சாலையில் சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

## நீட் தேர்வினால் மனமுடைத்து தற்கொலை

# உருவ படத்திற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் , காங்கிரஸ் கட்சி பொருளாளர் விஜய் வசந்த் எம்.பி ஆறுதல் கூறினார்





கிருஷ்ணகிரி, ஜூலை 13

நீட் தேர்வினால் மனமுடைத்து தற்கொலை செய்துக்கொண்டாதை அடுத்து அவரது உருவ படத்திற்கு தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் மற்றும் , காங்கிரஸ் கட்சி பொருளாளர் விஜய் வசந்த் எம்.பி. கிறிஸ்டோபர் திலக், கோபிநாத் ஆகியோர் மலர் தூவி மாணவனின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் TNHB காலணியை சேர்ந்த மாணவன் வெற்றியாத்தன் நீட் தேர்வினால் மனமுடைத்து தற்கொலை செய்துக் கொண்டாதை அடுத்து அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதற்காக தர்மபுரி மாவட்டம் வழியாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூருக்கு வருகை தந்த தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் மற்றும் , காங்கிரஸ் கட்சி பொருளாளர் விஜய் வசந்த் எம்.பி. பாராளுமன்ற உறுப்பினர்களான கிறிஸ்டோபர் திலக், கோபிநாத் ஆகியோருக்கு கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர்களான எம். சி, ரகு மற்றும் ஹரிஷ்பாபு மற்றும் ஓசூர் மாநகர காங்கிரஸ் தலைவர் சாதிக்ஹான் முன்னாள் தலைவர் தியாகராஜன் ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்,

இதனையடுத்து நீட் தேர்வினால் தற்கொலை செய்துக் கொண்ட வெற்றியானந்தனின் வீட்டுக்கு சென்ற இவர்கள் தற்கொலை செய்துக் கொண்ட மாணவன் வெற்றியானந்தனின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி மாணவனின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இதனையடுத்து போசிய மாநில தலைவர் மாணிக்கம் தாகூர் தமிழகத்தில் நீட் தேர்வினால் பரிதாபமாக உயிரிழந்த கோவை, சேலம் தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய பகுதியில் உள்ள மாணவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் தெரிவிக்கும் விதமாக நாங்க எல்லோரும் வந்து ஆறுதல் கூறி தங்களது அறுபத்தினை தெரிவித்து உள்ளோம், மாணவர்களின் உயிரை பறிக்கும் நீட் தேர்வை தமிழகத்தில் இருக்க கூடாது என்பது காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு ஆகையால் மத்திய அரசு மாணவர்களின் கனவை இதைக்கும் இந்த நீட் என்னும் அரக்கனை தமிழ்நாட்டில் இருந்து அகற்றும் வகையில் காங்கிரஸ் கட்சியின் போராடம் தீவிரமாக இருக்கும் என்று குறிப்பிட்டார் அப்போது கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத்தலைவர் பி.சி. சேகர், முன்னாள் மாவட்ட தலைவர்கள் கிருஷ்ணமூத்தி, இராமமூர்த்தி, நாராயண மூர்த்தி வட்டாரத்தலைவர் சித்திக், சிறுபான்மை பிரிவு மாநில துணைத் தலைவர் ஜாவித்கான், டாக்டர் தகி, இளைஞர்காங்கிரஸ் துணைத் தலைவர் சத்திவேல், முன்னாள் அமைப்பு சார மாவட்ட தலைவர் சென்னப்பன், வட்டாரத்தவர் மாரியப்பன், மீனவரணி மாவட்ட தலைவர் செல்வம், ஓ,பி,சி, மாவட்ட துணைச் செயலளர் குமார், நகர துணைத்தலைவர் பாலகிருஷ்ணன் மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த நீலகண்டன், கீர்த்திகணேஷ், வாஜித் பாஷா சுவாமி சீனிவாசன் மைசா அக்பர், ஷானவாஸ் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துக்கொண்டனர்

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.